MC.61/2024

27.11.2025

RW1 – சேகர் த/பெ.கண்ணன், வயது–48

மனுதாரர் மற்றும எதிர்மனுதாரர் ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 11.53 A.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –12.16 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 27.11.2025

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-

நீங்கள் என்ன பணி செய்கிறீர்கள் என்றால் இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். உங்களுக்கும் முதல் மனுதாரருக்கும் இடையே திருமணம் நடைபெறும்போது இராணுவத்தில் தான் பணிபுரிந்து வந்தீர்கள் என்றால் சரிதான். உங்கள் திருமண பந்தத்தில் வாயிலாக எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டாம் மனுதாரர் சுஜிதா மற்றும் மகன் ராகுல். நீங்கள் இராணுவத்தில் பணிபுரிந்தபோது தான் உங்கள் இரு குழந்தைகளும் பிறந்து குடும்பமாக ஒன்றாக வாழ்ந்து வந்தீர்கள் என்று சொன்னால் திருமணமாகி ஒன்பது ஆண்டுகள் வரையிலும் என்னுடன் தான் நான் பணிபுரிந்த இடத்தில் முதல் மனுதாரரும் குழந்தைகளும் ஒன்றாக வசித்து வந்தோம். பின்னர் பணி இடமாற்றம் காரணமாக அந்த இடத்தில் முதல் மனுதாரரையும் குழந்தைகளையும் உடன் வசிக்கவைக்கும் சூழல் இல்லாத காரணத்தினால் என் தாயார் வீட்டிற்கு அனுப்பிவைத்தேன். அங்கு ஒன்றரை ஆண்டுகள் முதல் மனுதாரர் இருந்து என் தாயார் வீட்டில் இருக்க மாட்டேன்

என்று சொன்ன காரணத்தினால் என் மாமியார் வீட்டின் அருகே இடம் வாங்கி அங்கு வீடு கட்டி என் மனைவி மற்றும் குழந்தைகளை பனிரெண்டு ஆண்டுகள் அந்த வீட்டில் குடியிருந்து வருகிறார்கள். அந்த வீட்டிற்கு நான் மாதம் ரூ.13,500/– வீடு கட்டியதற்கு வங்கி கடன் செலுத்திவருகிறேன். மேற்படி வீட்டு கடன் குறித்து நீங்கள் எதிருரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். உங்களுக்கும் முதல் மனுதாரருக்கும் இந்து குலவழக்கப்படி சீர்வரிசையுடன் திருமணம் செய்து வைத்தார்கள் என்று சொன்னால் சரிதான். உங்கள் குழந்தைகள் என்ன படித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் தற்போது என் குழந்தைகள் என்ன படிக்கிறார்கள் என்ற விவரம் தெரியாது. உங்களுக்கு எத்தனை வீடு, நிலங்கள் உள்ளது என்று சொன்னால் நான் வாங்கி வைத்துள்ள வீட்டை தவிர வேறு சொத்து கிடையாது. ஒரு வீடு அதன் விஸ்திரணம் ஐந்தரை செண்ட் நிலமாகும். நீங்கள் எங்கு வசித்து வருகிறீர்கள் என்றால் என் தந்தை வீட்டில் சந்திரபுரம் கிழக்குமேட்டில் வசித்து வருகிறேன். உங்கள் தந்தைக்கு நீங்கள் மட்டும் தான் வாரிசுதாரரா என்றால் நான் மற்றும் இரண்டு தங்கைகள். உங்கள் தந்தைக்கு எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றால் நான் குடியிருக்கும் வீடு தான். உங்களது முதல் விசாரணையில் நான்காவது பத்தியில் கிழக்குமேட்டில் இரண்டு மனை உள்ளது அதில் சுமார் 15 தென்னை மரங்கள் உள்ளதா என்றால் எனக்கு வீடு மட்டும் தான் உள்ளது.ட தென்னை மரங்கள் எதுவும் இல்லை. நீங்கள் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெறும்போது கடைசியாக உங்கள் மாத ஊதியம் என்னவென்றால் ரூ.67,000/–. உங்கள் ஓய்வூதிய பணி அனுகூலங்கள் எவ்வளவு என்றால்

எனக்கும் என் மனைவிக்கும் உள்ள கூட்டு வங்கி கணக்கில் Final Settlement ரூ.7,50,000/- வந்தது. அந்த தொகையை என்னால் திரும்ப பெற இயலவில்லை. என் மனைவி என் வங்கி கணக்கை Lock செய்துவிட்டார். முதல் மனுதாரர் தரப்பில் உங்களுக்கு ரூ.20,00,000/- இராணுவத்திலிருந்து பணி அனுகூலங்கள் கிடைத்ததாக சொல்லுகிறார் என்றால் என் மனைவி இராணுவ பதிவேட்டில் கையெழுத்திடாத காரணத்தினால் பணி அனுகூலங்கள் முழுவதுமாக எனக்கு கிடைக்கபெறவில்லை. குடும்ப பிரச்சிணை என இராணுவத்தில் பதிவு செய்த காரணத்தினாலும் எந்த பணி அனுகூலங்களும் கிடைக்கப்பெறவில்லை. உங்களுடைய பணி அனுகூலங்கள் இராணுவத்திலிருந்து கிடைக்கப்பெற்றது தொடர்பாக ஆவணங்கள் தாக்கல் செய்யமுடியுமா என்றால் என்னால் ஆவணத்தை கொடுக்க முடியாது. முதல் மனுதாரர் தான் நீரூபிக்க வேண்டும்.

(குறுக்கு விசாரணை தொடச்சி வழக்கறிஞர் வேண்டுகொளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது).

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur

Chief Judicial Magistrate,
Tirupathur.